| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| திருமதி.க.சசிகலா,<br>இயக்குநர்,<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | 1. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.<br>2. முதன்மைக் கல்வி அலுவலர், அனைத்து மாவட்டங்கள்.<br>3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்), அனைத்து மாவட்டங்கள்.<br>4. அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர், அனைத்து மாவட்டங்கள். |

**ந.க.எண். 013061/பி1/2025** **நாள் : 21.05.2026**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு – விடைத்தாள் ஒளிநகலுக்கு (Scan Copy) விண்ணப்பித்தல் – பள்ளி மாணவர்கள் தாம் பயின்ற பள்ளிகள் மூலமாகவும் தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் மூலமாகவும் ஆன்–லைனில் விண்ணப்பித்தல் – பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தல் – தொடர்பாக.

**பார்வை:** 1.அரசாணை (நிலை) எண். 211, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை நாள்.18.11.2023.
2.இவ்வலுவலகச் செய்திக் குறிப்பு, நாள்: 19.05.2026.
3.இவ்வலுவலகச் செய்திக் குறிப்பு,நாள்: 21.05.2026.

-----

மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய தேர்வர்களின் தேர்வு முடிவுகள் **20.05.2026** அன்று வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை 1–இல் காணும் அரசாணையின்படி, 2023–2024 கல்வியாண்டு முதல் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளுக்கு பிறகு தேர்வர்கள் தங்களது மதிப்பெண்களில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, **முதலில் தங்களது விடைத்தாள் ஒளிநகல் (Scan Copy)கோரி விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விடைத்தாள் ஒளிநகல் பெற்ற பின்னரே மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீடு கோரி விண்ணப்பிக்க இயலும்.**

எனவே, தங்கள் பள்ளியில் பயின்ற மாணாக்கர்கள் மற்றும் தங்கள் தேர்வு மையத்தில் தனித்தேர்வர்களாகத் தேர்வெழுதியோர் விடைத்தாள் ஒளிநகல் கோரி விண்ணப்பிக்க விரும்பினால், **22.05.2026 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் 27.05.2026 (புதன்கிழமை) மாலை 5.00 மணி வரை** விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களைப் பதிவு செய்ய விரும்பும் பள்ளி மாணாக்கர், தாங்கள் பயின்ற பள்ளி வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வாயிலாகவும் விண்ணப்பிக்கலாம் என இவ்வியக்ககத்திலிருந்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்கள் விண்ணப்பங்களைப் பதிவு செய்ய தங்களது பள்ளியை தொடர்பு கொள்ளும்போது, தாங்கள் அதற்கேற்ப தகுந்த ஏற்பாடுகளைத் தயாராக செய்து வைத்திருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு பள்ளிக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User ID, Password–ஐ பயன்படுத்தியும், கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றியும் மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்திட அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

- www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று "click to access to online portal" என்ற வாசகத்தினை click செய்து திரையில் தோன்றும் "SSLC Examination March/ April 2026 – Scan application for Registration" என்ற தலைப்பினை click செய்து USER–ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, பின்னர், SSLC EXAM MARCH / APRIL– 2026 SCAN COPY APPLICATION என்பதை click செய்து, திரையில் தோன்றும் விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து தேவைப்படும் நகல்களை எடுத்துக் கொள்ளவேண்டும். மேலும் தேர்வர்களுக்கான அறிவுரைகளையும் பதிவிறக்கம் செய்து தேர்வர்களுக்கு வழங்கவேண்டும்.

- மாணவர்கள் விடைத்தாள் ஒளிநகல் கோரி விண்ணப்பிக்க வரும்பொழுது, அன்னாரிடம் இத்துடன் இணைத்தனுப்பப்படும் விடைத்தாள் ஒளிநகல் கோரும் ஒரு விண்ணப்பத்தினை (Scan copy application) அளிக்க வேண்டும். அதில், எந்தெந்தப் பாடங்களுக்கு விடைத்தாளின் நகல் தேவை என்ற விவரங்களை மாணவர்கள் பூர்த்தி செய்ய அறிவுறுத்தி அப்படிவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

- விடைத்தாள் ஒளிநகலுக்குரிய தொகையினைப் பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

  ❖ விடைத்தாளின் நகல் (Copy of the answer sheet)– கட்டணம் **பாடம் ஒவ்வொன்றிற்கும் – 275 /–**

- விடைத்தாள் ஒளிநகல் கோரி விண்ணப்பிக்கும் பாடங்களுக்கு தற்போதே மறுகூட்டலோ அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க இயலாது.

- **விடைத்தாள் ஒளிநகல் பெற்ற மாணாக்கர்களுக்கு மட்டுமே மதிப்பெண் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும்.**

- விடைத்தாள் ஒளிநகல் கோரி பள்ளிகள் / தேர்வு மையங்களில் விண்ணப்பிக்கும் மாணாக்கர் அதன்பிறகு விடைத்தாள் ஒளிநகல் பதிவிறக்கம் செய்வது, மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பது தொடர்பான விவரங்களை அரசுத் தேர்வுத்துறையின் இணையதளத்தில் (www.dge.tn.gov.in) வெளியிடப்படும் செய்திக்குறிப்பின் மூலமே அறிந்து செயல்பட வேண்டும். **எக்காரணம் கொண்டும் பள்ளிகள் / தேர்வுமையங்களை அணுக வேண்டாம் என்பதை விண்ணப்பிக்கும் மாணாக்கர் / பெற்றோர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.**

- மாணவர்களிடமிருந்து பூர்த்தி செய்த படிவத்தையும், கட்டணத் தொகையினையும் பெற்றவுடன், இணையதளத்தில் அவ்விவரங்களை பதிவேற்றம் செய்யவேண்டும்.

- எந்தெந்த பாடங்களுக்கு மாணவர்கள் விடைத்தாள் ஒளிநகல் கோரி விண்ணப்பிக்கிறார்கள் என்ற விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்தவுடன் மாணவர் அளித்த விண்ணப்பப் படிவத்தோடு **அவ்விவரங்களை மீண்டும் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும்.** உறுதிசெய்த பின்னரே Submit கொடுக்க வேண்டும்.

- Submit செய்தவுடன் பதிவெண், விண்ணப்பித்த பாடங்கள்,செலுத்த வேண்டிய தொகை ஆகியவை குறிப்பிட்ட ஒப்புகைச்சீட்டினை (acknowledgement) பதிவிறக்கம் செய்ய வேண்டும். ஒப்புகைச் சீட்டில் கையொப்பம் மற்றும் பள்ளியின் முத்திரையிட்டு மாணவரிடம் வழங்கவேண்டும். ஒப்புகைச்சீட்டினை மாணவர் மிக பாதுகாப்பாக வைத்துக் கொள்ள அறிவுறுத்த வேண்டும். அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் **பின்னர் அறிவிக்கப்படும் தேதியில் தேர்வரது தேர்வெண் மற்றும் பிறந்த தேதி உள்ளிட்ட விவரங்களை உள்ளீடு செய்து விடைத்தாட்களின் ஒளிநகல்களை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும்.**

- தேர்வர்கள் தமக்கு வேண்டாத பாடத்திற்கு விண்ணப்பம் தவறுதலாக பதிவு செய்யப்பட்டு விட்டதாகவும், அதன்பின் பதியப்படாத வேறு பாடத்திற்கு விடைத்தாள் ஒளிநகல் வழங்குமாறும் இவ்வியக்ககத்தில் வந்து கோரும் நிகழ்வுகள் தங்களது கவனமான செயல்பாடுகள் மூலம் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும். அவ்வாறான நிகழ்வுகள் நிகழும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் மீது துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- ஒவ்வொரு நாளும் பணி முடிந்தவுடன், daily summary report/daily detailed report இவ்விரண்டையும் click செய்தால் அன்றைய தினம் பதிவு செய்த விவரங்கள் தங்களுக்குக் கிடைக்கும். இந்த அறிக்கையினை பதிவிறக்கம் செய்துகொண்டு, அன்றைய தினம் பதிவுசெய்த விண்ணப்பங்களையும் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டத் தொகையினையும் ஒப்பிட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

- **29.05.2026 அன்று காலை 11.00 மணிக்கு** FINAL SUMMARY REPORT/FINAL DETAILED REPORT என்ற பகுதியினை click செய்தால் தங்கள் பள்ளியில் விடைத்தாள் ஒளிநகலுக்கு விண்ணப்பித்த மாணவர் விவரங்கள், விண்ணப்பித்த பாடங்கள், பெறப்பட்ட மொத்தத் தொகை ஆகிய விவரங்கள் தெரியவரும்.

- பதிவிறக்கம் செய்த Report–னை இரு நகல்கள் எடுத்து பெறப்பட்ட தொகையினை (**பத்தாம் வகுப்பு தேர்வுக்கான விடைத்தாள் ஒளிநகல் விண்ணப்ப எண்ணிக்கைக்கான கட்டணத் தொகையினை** www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி விடைத்தாள் ஒளிநகலுக்கான விண்ணப்பக் கட்டணத்தினை செலுத்திட வேண்டும்.

- விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் பொழுது கீழ்கண்ட கணக்குத் தலைப்பை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| District | : | PAO (South) Chennai |
| Department Receiving Receipts | : | 04304 Directorate of Government Examinations |
| DDO Name | : | 41010118 Accounts Officer |
| கணக்குத் தலைப்பு | : | 0202 01 102 AA 22711 – Copying / Scanning |

மேற்கண்டவாறு தேர்வர்களின் விடைத்தாள் ஒளிநகல் விண்ணப்பக் கட்டணத் தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt–ஐ **01.06.2026–க்குள்** சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களால் நேரில் ஒப்படைத்து ஒரு நகலில் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் ஒப்பம் மற்றும் அலுவலக முத்திரையினை பெற்றுச் செல்ல வேண்டும்.

மேற்காண் வழிமுறைகளை இணை இயக்குநர்(கல்வி), புதுச்சேரி மற்றும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து உதவி இயக்குநர்களும் Payment Receipt மற்றும் விண்ணப்பங்களை ஒப்பிட்டு அதன் அறிக்கையினை **03.06.2026–க்குள்** துணை இயக்குநர் (பொது) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

1. விடைத்தாள் ஒளிநகல் / மறுகூட்டலுக்கான கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்.
2. விடைத்தாள் ஒளிநகல் கோரும் விண்ணப்பம்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**நகல்:**

1. மாநில திட்ட இயக்குநர்,ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6
2. உறுப்பினர் செயலர், மாதிரிப்பள்ளிகள், சென்னை–6
   –தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6
4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6
   – தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
5. பி2 மற்றும் பி3 பிரிவுகள், அலுவலகம்.